**Press Note**

# Assistant Engineer, TNEB, Trichy District convicted for 2 years in a Bribe case

The Complainant Tr.L.Karthikeyan, S/o Lakshmanan, Golden Nagar, Easanatham, Aravakurichi Taluk, Karur district had constructed a new house in the name of his father Tr.Lakshmanan during 2009-10 using a Commercial EB service connection. After completion of construction works, the complainant gave a tariff change application at the office of the Assistant Engineer, TNEB, Easanatham, Trichy District. Tr.S.Sureshkumar, formerly Assistant Engineer, O&M, TNEB during July-2010. In order to take action on this application, he demanded Rs.1,000/- on 6.10.2010 as bribe from the complainant.

Since the complainant was not willing to pay bribe, he preferred a written complaint before the Vigilance & Anti – Corruption, Trichy Detachment and a case was registered and organized a trap proceedings on 07.10.2010. During the course of trap proceedings on 7.10.2010, the accused demanded and accepted Rs.1000/- from the complainant, caught red-handed and remanded to judicial custody.

After completion of investigation, the case charge sheeted on 22.6.2012. The Hon'ble Special Judge/Chief Judicial Magistrate, Karur conducted trial and convicted today on 30.6.23. "The Accused was sentenced to undergo 2 years Rigorous Imprisonment for Sec.7 of the PC Act,1988 and fined Rs.10,000/-, in default pay fine further 6 months RI and to undergo 3 years Rigorous Imprisonment for Sec.13(2) r/w 13(1)(d) of the PC Act, 1988 and fined Rs.10,000/-, in default pay fine further one year RI. Both sentences were ordered to run concurrently.

## பத்திரிக்கை செய்தி

## கையூட்டு கேட்டு பெற்ற வழக்கில் முன்னால் உதவி மின் பொறியாளருக்கு 2 வருட கடுங்காவல் சிறை தண்டனை விதித்து தீர்ப்பு

புகார்தாரர் திரு.L.கார்த்திகேயன், த/பெ.லட்சுமணன், கோல்டன் நகர், ஈசநத்தம், அரவக்குறிச்சி வட்டம், கரூர் என்பவர் கடந்த 2009 ஆம் ஆண்டு ஜீன் மாதத்தில் அவருக்கு சொந்தமான இடத்தில் தனது தந்தை பெயரில் கட்டப்பட்ட புதிய வீட்டிற்கு தற்காலிகமாக மின் இணைப்பு பெற்று வீடு கட்டி முடித்தார். அந்த மின் இணைப்பை வீட்டு உபயோகத்திற்கான மின் இணைப்பாக மாற்றி தரும்படி கேட்டு விண்ணப்பத்தை ஈசநத்தத்தில் உள்ள தமிழ்நாடு மின்சார வாரிய உதவி மின் பொறியாளர் திரு.S.சுரேஷ்குமார் என்பவரிடம் கொடுத்துள்ளார். அந்த விண்ணப்பத்தின் மீது நடவடிக்கை எடுக்க 6.10.2010ஆம் தேதி வாதி அவரை அணுகி கேட்டபோது, ரூ.1000/- லஞ்சம் கேட்டுள்ளார். லஞ்சம் கொடுக்க விருப்பமில்லாமல் புகார்தாரர் திருச்சி ஊழல் தடுப்பு துறையில் கொடுத்த புகாரின்பேரில் திருச்சி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவில் வழக்கு பதிவு செய்யப்பட்டது.

அதனைத்தொடர்ந்து பொறிவைத்து பிடிக்கும் நிகழ்வில் புகார்தாரர் திரு.L.கார்த்திகேயன் என்பவரிடமிருந்து பணம் ரூ.1000/- லஞ்சமாக திரு.S.சுரேஷ்குமார் வாங்கியபோது கைது செய்யப்பட்டு நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டார். இதனைத்தொடர்ந்து இவ்வழக்கு விசாரணை முடித்து, 22.06.2012ஆம் தேதியன்று குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டு, மாண்புமிகு சிறப்பு நீதிபதி மற்றும் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர், கரூர் அவர்களின் நீதிமன்றத்தில் விசாரணை நடைபெற்று, இன்று 30.06.2023-ஆம் தேதி கீழ்க்கண்டவாறு தீர்ப்பளிக்கப்பட்டது.

எதிரி திரு.S.சுரேஷ்குமார் பள்ளப்பட்டி உதவி மின் பொறியாளர், கரூர் என்பவர் ஊழல் தடுப்பு சட்டம் 1988 பிரிவு-7 and 13(2) r/w 13(1)(d)-ன் படி குற்றவாளி என உறுதி செய்யப்பட்டது. ஊழல் தடுப்பு சட்டம் 1988 பிரிவு-7-ன்படி எதிரிக்கு 2 ஆண்டுகள் கடுங்காவல் சிறை தண்டனை மற்றும் அபராதம் ரூ.10,000/- விதிக்கப்பட்டது. மேற்படி அபராத தொகையை செலுத்த தவறினால் 6 மாதம் கடுங்காவல் சிறை தண்டனை விதித்தும், மேலும் சட்டப்பிரிவு 13(2) r/w 13(1)(d)-ன் படி எதிரிக்கு 3 ஆண்டுகள் கடுங்காவல் சிறை தண்டனையும், அபராதமாக ரூ.10,000/- விதித்தும், மேற்படி அபராத தொகையை செலுத்த தவறினால் 1 வருடம் கடுங்காவல் சிறை தண்டனை விதித்தும், இத்தண்டனை காலத்தை ஏக காலத்தில் அனுபவிக்குமாறு தீர்ப்பு வழங்கப்பட்டது.